*Sri Lankan Journal of Arabic and Islamic Studies, 3(1) 2020*
*Published by Faculty of Islamic Studies and Arabic Language, ISSN: 2550:3014*
*Received: 08th April 2020/Accepted: 14th September 2020*

# ‘ஜிஹார்த்’ என்பதன் சொற்பொருளாய்வு

# MEANING OF THE WORD AL ‘JIHAD’- A SEMANTICALLY APPROACH

**MCS. Shathifa[1], MYM.Suheera[2] & MS. Zunoomy[3]**

[1, 2 & 3] Department of Arabic Language, Faculty of Islamic Studies and Arabic Language,
South Eastern University of Sri Lanka
ummunidhaoluvil@gmail.com[1], suheesafeek@gmail.com[2]

## Abstract

*The term Jihad literally means striving and utmost effort. Meanwhile, as far as the multi-cultural Sri Lankan context is considered, the term Jihad is referred to contradictory meanings like terrorism and extremism. Whereas, Islam is yet misinterpreted among them. Accordingly, such a study intends to clarify the literally meanings of Jihad. Therefore this study aims at attaining the objectives focusing on qualitative analysis and the secondary data. The books and researches relevant to Jihad were the major sources of secondary data collection. The term Jihad is misinterpreted to be terrorism, extremism aggression and assault contemporarily. In contradiction, the term itself literally means physical, mental striving, commitment, hard work, efficient activity, sacrifice, continuous struggles and much more positive meanings. The finding of this research is denoted that the term Jihad is identified to be the effort and strive for the cause of Allah to attain what Allah desires and to abstain what Allah has forbidden.*

**Key words:** *Jihad, Semantically Approach, Effort, Struggle, comprehend*

**ஆய்வுச் சுருக்கம்**

*‘ஜிஹார்த்’ எனும் சொல்லுக்கு மொழிரீதியாக விடாமுயற்சி, அர்ப்பணிப்பு போன்ற பரந்த கருத்துக்கள் காணப்படுகின்றன. எனினும் இலங்கை போன்ற பல்லின சமூக சூழலில் வாழும் மக்கள் மத்தியில் ‘ஜிஹார்த்’ எனும் பதமானது பயங்கரவாதம், தீவிரவாதம் என்றவாறான எதிர்மறைக் கருத்துக்களால் வியாக்கியானம் செய்யப்பட்டு இஸ்லாம் பற்றிய தவறான புரிதல்கள் ஏற்படுவதற்கு வழிவகுத்துள்ளன. இச்சந்தர்ப்பத்தில், இது தொடர்பான தெளிவான ஒரு புரிதலை ஏற்படுத்தும் வகையில் ‘ஜிஹார்த்’ எனும் பதத்திற்கான மொழிரீதியான விளக்கத்தினை கருத்தியல் ரீதியாக அடையாளப்படுத்த இவ்வாய்வு முனைகின்றது. இந்நோக்கத்தை அடைவதற்காக இவ்வாய்வு இரண்டாம் நிலைத்தரவுகளை மையமாகக் கொண்டு பண்புசார் பகுப்பாய்வு முறையை பயன்படுத்துகின்றது. இதற்காக ‘ஜிஹார்த்’ தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், நூற்கள் உள்வாங்கப்பட்டுள்ளன. ‘ஜிஹார்த்’ எனும் அறபுப்பதத்திற்கு பயங்கரவாதம், தீவிரவாதம், கடும்போக்கு, தாக்குதல், அத்துமீறல், இரத்தம் ஓட்டுதல் என்பன போன்ற எதிர்மறையான பொருட்கோடல்கள் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மாறாக, ‘ஜிஹார்த்’ எனும் அறபுப் பதமானது மொழியியல் ரீதியாக உடல், உள ரீதியான விடாமுயற்சி, அர்ப்பணிப்பு, கடின உழைப்பு, ஆக்கபூர்வமான செயற்பாடு, தியாக உழைப்பு, தொடர் போராட்டம், அறிவியல் ரீதியான முயற்சி ஆகிய நேர்கருத்துக்கள் பலவற்றை கொண்டிருக்கின்றது. இறைவன் விரும்பக்கூடிய விடயங்களை அடைந்துகொள்வதற்கும், இறைநிராகரிப்பு, பாவமான காரியங்கள் போன்ற இறைவனின் வெறுப்புக்குரியதான விடயங்களிலிருந்தும் தவிர்ந்து கொள்வதற்குமாக மேற்கொள்ளப்படுகின்ற முயற்சி, அர்ப்பணிப்பு ஆகியவையே ‘ஜிஹார்த்’ எனும் அறபுப் பதத்திற்கான தமிழ் மொழி பெயர்ப்புக்களாக அடையாளப்படுத்தப்படுகின்றன என்பது இவ்வாய்வின் முடிவாக முன்வைக்கப்படுகின்றது.*

**திறவுச்சொற்கள்:** *ஜிஹார்த், சொற்பொருளாய்வு, முயற்சி, அர்ப்பணிப்பு, புரிந்துணர்வு*

## 1. அறிமுகம்

இவ்வுலகிற்கு இறுதியாக அருளப்பட்ட மார்க்கம் இஸ்லாம் ஆகும். இம்மார்க்கமானது இஸ்லாமிய கோட்பாட்டின் (அகீதா) படி மறுமை நாள் ஏற்படும் வரை பிறக்கும் அனைத்து மனிதர்களுக்குமான நேர்வழிகாட்டியாக அமையப்பெற்றுள்ளது. இம்மார்க்கம் அமைதி, சாந்தி, சமாதானத்தை போதிக்கக்கூடியதொரு இனிய மார்க்கமாகும். இதிலுள்ள அனைத்து வழிகாட்டல்களும் மனித வெற்றிக்கான வழிமுறைகளை அழகான முறையில் தெளிவுபடுத்துகின்றன. இறுதியாக அருளப்பட்ட மார்க்கம் என்றவகையில் இதிலுள்ள போதனைகள் முழு மனிய சமூதாயத்திற்கும் வழிகாட்டக்கூடியதாக அமைய வேண்டும். அவ்வாறு அமைந்திருப்பது, இது அல்லாஹ்வின் வேதம் என்பதற்கான மிகச்சிறந்த எடுத்துக்காட்டாகும். இஸ்லாம் அல்குர்ஆன், அஸ்ஸுன்னா ஆகிய இரண்டையும் மூலாதாரங்களாக கொண்டுள்ளது. இவ்விரண்டும் முழு மனித சமூதாயத்திற்குமான வழிகாட்டல்களை கொண்டுள்ளதனை அவற்றை வாசித்து, சிந்தித்தவர்கள் எவரும் மறுப்பதற்கில்லை. இந்தவகையில் இஸ்லாமிய மார்க்கமானது ஒரு மனிதன், ஒரு சமூகம் வெற்றியடைவதற்கான அனைத்துவித போதனைகளையும் கொண்டமைந்துள்ளது. இவை இயல்பு வாழ்வில் நடைமுறைப்படுத்தப்படும் பட்சத்தில் சிறந்த பிரதிபலன்களை அடையலாம்.

இஸ்லாமானது ஓரிரு வார்த்தைகளை மையமாகக் கொண்டு செயற்படுமாறு ஏவுகின்ற மார்க்கமல்ல. மாறாக, ஒவ்வொரு போதனைகளுக்கும், வழிகாட்டல்களுக்கும் தெளிவான விளக்கங்களை அல்குர்ஆன், அஸ்ஸுன்னா மூலம் வழங்கிய பின்பே நடைமுறைப்படுத்துமாறு கூறுகின்றது. இத்தோரணையில், இன்றளவில் குறிப்பாக பல்லினக் கலாசார சூழல் கொண்ட இலங்கைத்திரு நாட்டில் இஸ்லாம் பற்றிய பிழையான புரிதல்களும், வலிந்து கொடுக்கப்படும் வியாக்கியானங்களும் அதிகரித்து வருகின்றன. அவற்றுள் 'இஸ்லாம் தீவிரவாதத்தை தூண்டுகின்றது, ஜிஹாத் செய்ய ஏவுகின்றது', 'இஸ்லாம் கொலை செய்வதை விரும்புகின்றது' போன்ற தவறான புரிதல்கள் காணப்படுவதுடன், 'ஜிஹாத்' என்பதற்கு வலிந்து மோசமான வியாக்கியானங்களும் கொடுக்கப்படுகின்றன. இன்று இஸ்லாமிய கலைச்சொற்கள் (Islamic Terminologies) திரிவுபடுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக 'ஜிஹாத்' என்பது பயங்கரவாதம் என பிற சமயங்களை பின்பற்றுவோர்களால், இஸ்லாத்தின் வளர்ச்சி மீது ஐயப்பாடுடையவர்களினால் (Islamophobia [1]) பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. 'ஜிஹாத்' என்பதற்கு தனித்துவமான வரைவிலக்கணங்கள், வரையறைகள், பண்புகள் இஸ்லாத்தில் காணப்படுகின்ற நிலையில் தீவிரவாதம், வாளேந்தி போராடுதல் என மாத்திரம் மட்டிட்டுக்கொள்வது தவறாகும். (ஷபீக், 2019)

'ஜிஹாத்' எனும் அறுபுப்பதமானது முயற்சித்தல், அர்ப்பணித்தல் போன்ற நேர்சிந்தனை கருத்தை (Positive Meaning) தன்னகத்தே கொண்டிருக்கின்ற போது, அதற்கு தீவிரவாதம், பயங்கரவாதம் போன்ற மறைச்சிந்தனை கருத்து (Negative Meaning) வலிந்து உருவாக்கப்பட்டுள்ளது. இதனால் இன்று உலகளவில் வெறுப்பூட்டும் பேச்சுக்களில; (Hate Speech) இச்சொல் முதன்மையாக உள்ளது (ஸிப்லி, 2019). இவ்வாறு வலிந்து உருவாக்கப்பட்ட வியாக்கியானத்தை சரியென புரிந்துகொண்டு இஸ்லாத்தை விமர்சிக்க தலைப்படுவது அதிகரித்து விட்டன.

---

[1] Islamophobia is the fear, hatred of, or prejudice against the Islamic Religion or Muslims generally.It is a contrived fear or prejudice fomented by the existing Eurocentric and Orientalist global power structure.(From: https://justiceformuslims.org/what-isislamophobia/)

## 2. ஆய்வின் நோக்கமும் முக்கியத்துவமும்

இஸ்லாமிய மார்க்கத்தை பின்பற்றுகின்ற முஸ்லிம்கள் குறிப்பாக இலங்கை வாழ் முஸ்லிம்கள் தற்போதைய சூழலில் இன, மத, கலாசார, பொருளாதார ரீதியாக பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். இதன்தொடரில், இஸ்லாமிய கோட்பாடுகளுடன் தொடர்புபட்ட பல அறபுச் சொற்களுக்கான கருத்துக்கள் தவறான புரிதல்களுக்கும், வியாக்கியானங்களுக்கும் உட்படுத்தப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்றான 'ஜிஹாத்' எனும் சொல்லானது மூடலான வியாக்கியானத்திற்கு வலிந்து உள்வாங்கப்பட்டு, பிழையான முறையில் பொருட்கோடல் செய்யப்படுகின்றது. இச்சொல் பற்றிய கருத்தியல் ரீதியான தெளிவான விளக்கமின்மையால், அதன் இயல்புத் தன்மை மழுங்கடிக்கப்பட்டு வருகின்றது. இவ்வாறானதொரு தருணத்தில் காலத்தின் தேவையை உணர்ந்து, இச்சொல் சுட்டி நிற்கும் கருத்துக்களை அடையாளப்படுத்தும் நோக்கில் 'ஜிஹாத்' எனும் அறபுப் பதத்திற்குரிய மிகத்துல்லியமான கருத்துக்களை மொழியியல் ரீதியாகவும் அதனது தமிழ் மொழி வடிவத்தையும் இவ்வாய்வு அலசுகின்றது.

## 3. ஆய்வுப் பிரச்சினை

'ஜிஹாத்' எனும் அறபுப்பதத்திற்கு பரந்த கருத்துக்கள், அர்த்தங்கள் காணப்படுகின்ற போதும், இன்றைய சூழலில் குறிப்பாக இலங்கையில் மூடலான வகையில் வியாக்கியானம் செய்யப்படுகின்றது.

## 4. ஆய்வு முறையியல்

இவ்வாய்வானது இரண்டாம் நிலைத்தரவுகளை மையமாக கொண்டு பண்புசார் பகுப்பாய்வு முறையில் (Descriptive Analysis) மேற்கொள்ளப்பட்டுள்ளது. இரண்டாம் நிலைத்தரவுகளுக்காக நூற்கள், ஆய்வுக் கட்டுரைகள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், இணையக் கட்டுரைகள் ஆகியன பயன்படுத்தப்பட்டுள்ளன.

## 5 இலக்கிய மீளாய்வு

"அ.ஃ.தருஸ்ஸியா-ஃக் .ஃ.பீ த.ஃ.வீலி ஆயாதில் ஜிஹாத் - ஜிஹாத் பற்றிய அல்குர்ஆனிய வசனங்களை வியாக்கியானம் (த.ஃ.வீல் -Interpretation)செய்வதில் மொழிநடையின் தாக்கம் (Effect of Context)",உபாதா, முராத். (2016/17), பட்டப்பின் படிப்பை பூர்த்திசெய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட ஆய்வு.

இவ்வாய்வானது மொழிநடை (Context)பற்றிய அறிமுகத்தையும், அறபு மற்றும் அறபியல்லாத அறிஞர்களிடத்தில் இதன் வரைவிலக்கணங்கள் பற்றிய தெளிவும் முதற்பகுதியில் வழங்கப்பட்டுள்ளது. இரண்டாம் பகுதி 'ஜிஹாத்' பற்றிய வரைவிலக்கணங்களையும், அது பற்றி வந்துள்ள அல்குர்ஆனிய வசனங்களை தெளிவுபடுத்துவதில் இஸ்லாமிய அறிஞர்களின் வகிபாகங்களைப் பற்றியும் பேசுகின்றது. அதாவது, 'ஜாஹத' எனும் வினையடியிலிருந்து உருவான 'ஜிஹாத்' எனும் சொல்லானது மொழி ரீதியாக முயற்சியை அர்ப்பணித்தல், பலத்தைப் பிரயோகித்தல், சிரமங்களை எதிர்கொள்ளல் என பொருள்கொள்ளப்படுகின்றது. 'ஜிஹாத்' எனும் சொல்லிலிருந்து பிரிந்து வந்த 34 விதமான சொற்பிரயோகங்கள் அல்குர்ஆனில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இப்பிரயோகங்களை விளங்கிக் கொள்வதற்காக குறித்த வசனம் இறக்கப்பட்ட பின்னணி, மாறிய – மாற்றப்பட்ட வசனங்கள் பற்றிய தெளிவு ஆகிய விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். இவ்வாய்வின் இறுதிப்பகுதி நவீன அறிஞர்களிடத்தில் 'ஜிஹாத்' பற்றிய எண்ணக்கருவை தெளிவாக விளக்கியுள்ளது.

"The Demystification of Jihad and Islamic Capitalism: Comparative Analysis of Max Weber's Thesis on the protestant Ethics and the Spirit of Capitalism", Rameez, Aboobacker (2014). 'Kalam' International Journal of Faculty of Arts and Culture, South Eastern University of Sri Lanka.

இவ்வாய்வானது 'ஜிஹாத்' எனும் சொல்லானது தவறான முறையில் புரியப்பட்டுள்ளமையை தெளிவுபடுத்துகின்றது. இச்சொல்லின் இயல்பான அர்த்தத்திற்கும், பிழையான வியாக்கியானத்திற்கும் இடையிலான வேறுபாட்டை தர்க்க ரீதியாக முன்வைக்கின்றது. மேலும் 'ஜிஹாத்' எனும் சொல்லின் பெறுமானத்தை புனரமைப்புச் செய்யும் வகையில் இவ்வாய்வு அமைந்துள்ளது.

“ம.்ப்ஹூமுல் ஜிஹாத் - ஜிஹாத் பற்றிய தெளிவு”, அல்ஜவ்ஹரி, முஹம்மத் மூலம் எழுதப்பட்ட இணையக் கட்டுரையானது ‘ஜிஹாத்’ பற்றிய வரைவிலக்கணம், கருத்து, வகைகள் பற்றிப் பேசுகின்றது. மேலும் இஸ்லாமிய சமூகத்திலும், பிற சமூகங்களிலும் ‘ஜிஹாத்’ எவ்வாறு பார்க்கப்படுகின்றது. அதன் வரையறைகள், அடிப்படைகள் பற்றி விரிவாக அலசுகின்றது. ‘ஜிஹாத்’ என்பது வெறுமனே வாளேந்தி போராடுவது மாத்திரமல்ல என்பதை அல்குர்ஆன், அஸ்ஸுன்னா ஆதாரங்களுடன் கலந்துரையாடுகின்றது.

“மா ஹுவல் ‘ஜிஹாத்’” ஜிஹாத் என்றால் என்ன?, ஷபீக், ஹம்தி மூலம் எழுதப்பட்ட இணையக் கட்டுரையானது பயங்கரவாதம் என பிழையாக அர்த்தம் கொடுக்கப்பட்டுள்ள ‘ஜிஹாத்’ என்ற விடயம் இஸ்லாத்தில் இறுக்கமான வரையறைகளுடன் கூடிய அம்சமாகும். இஸ்லாம் என்பது நெகிழாத் தன்மை கொண்டதல்ல, மாறாக காலமாற்றங்களுக்கு ஏற்ப இயைந்து சட்டங்களை வரையறுக்கக்கூடிய உயிரோட்டமுள்ள மார்க்கமாகும். மேலும் இஸ்லாமிய வரலாற்றில் குறிப்பாக நபி (ஸல்) அவர்களின் காலத்தில் இடம்பெற்ற போர்கள் பாதுகாப்புப் போர்களாக (Defence Wars) அமைந்திருந்தன என தர்க்க ரீதியாக தெளிவுபடுத்தியுள்ளது.

மேற்கூறப்பட்ட இலக்கிய மீளாய்வுகளில் இருந்து இவ்வாய்வுத் தலைப்புக்குப் பொருத்தமான வரைவிலக்கணங்கள், சொல் விளக்கங்கள் ஆய்வாளர்களால் பெறப்பட்டன.

## 6. கலந்துரையாடல்

### அ. “ஜிஹாத்” - மொழிக் கருத்து:

‘ஜிஹாத்’ எனும் சொல்லுக்குரிய அர்த்தங்களை மொழியியலாளர்கள் பின்வருமாறு முன்வைக்கின்றனர்.

- ✓ ‘ஜாஹத’ எனும் வினையடியிருந்து பிறந்த இச்சொல்லுக்கு முயற்சி, பலத்தை பிரயோகித்தல். ‘இஜ்ஹத் ஜுஹ்தக’ என்பதற்கு உமது இலக்கை அடைந்துகொள் என்பது பொருளாகும்.(ஆபாதி,1991)[2]
- ✓ ‘ஜிஹாத்’ சொல்லானது கடின உழைப்பு, பலத்தை பிரயோகித்தல் ஆகிய அர்த்தங்களை கொண்டுள்ளன. (இப்னு மன்ழூர்,1968)[3]
- ✓ ‘ஜுஹ்த்’ கடினத்துடன் மனிதனுக்கு செய்ய முடியுமானவை. ‘ஜஹ்த, ஜாஹ்த’ பலத்தை அர்ப்பணம் செய்தல் ஆகும். (அர்ராஸி,2003)[4]
- ✓ ‘ஜஹ்த’ என்ற சொல்லுக்கு கடின உழைப்புடன் ஒரு விடயத்தை மேற்கொள்வது என்பது பொருளாகும். (இப்னு பாரிஸ்,1983)[5]
- ✓ ‘ஜிஹாத்’ என்ற சொல்லானது இயலுமை, கடின உழைப்பு, விடா முயற்சியை அர்ப்பணித்தல் ஆகிய கருத்துக்களை பிரதிபலிக்கின்றது. அதாவது மார்க்க கடமையை நிறைவேற்றுவதில் பூரண உளத்தூய்மை காணப்படுதல் ஆகும். (அத்தவ்ரி,2017)[6]

இந்தவகையில், ‘ஜிஹாத்’ எனும் சொல்லானது நேர் கருத்துக்களை (Positive Meaning) தாங்கியிருப்பதை மேற்கூறப்பட்ட மொழியியலாளர்களின் வரைவிலக்கங்களை வைத்து நோக்கும் போது அவதானிக்க முடியுமாக உள்ளது.

### ஆ. ஜிஹாத் - மொழியியல் அறிஞர்களின் வரைவிலக்கணங்கள்:

‘ஜிஹாத்’ எனும் அறபுச்சொல்லுக்குரிய வரைவிலக்கணங்கள் இஸ்லாமிய அறிஞர்களினால் பின்வருமாறு அடையாளப்படுத்தப்பட்டுள்ளன:

---

[2]பைரூஸ்,ஆபாதி. (1991).அல்காமூஸ் அல்முஹீத். பைரூத்: முஅஸ்ஸிஸதுர் ரிஸாலா. ப.51
[3]இப்னு மன்ழூர். (1968).லிஸானுல் அரப்.ஐபரூத்: தாருல் மஆரிப். ப.1.்.708
[4]அர்ராஸி,முஹம்மத். (2003). முக்தாருஸ் ஸிஹாஹ். ரியாத்: மக்தபதுர் ருஸ்த் லின்னஸ்ர். ப.153
[5]இப்னு பாரிஸ். (1983).மு.்ஜம் மகாயீஸ் அல்லுஹா. குவைத்: ம.்ஹதுல் மக்தூதாதுல் அறபிய்யா. ப.1.்.486
[6]Addawri, Aiman.(2017). *The Distinction between Jihad and Terrorism in the light of the Holy Quran and Sunnah of the Prophet.* Hadis Tetkikleri Dergisi (HTD), XV/1.

ஆங்கிலத்தில் 'ஜிஹாத்' என்பது Effort(முயற்சி), Strive(உழைப்பு), Struggle(போராட்டம்) என கருத்துப்பெறுகின்றது (றமீஸ், 2014).

அட்டவணை: 01 அறிஞர்களின் வரைவிலக்கணங்கள்

| தொ.இல | அறிஞர்கள் | வரைவிலக்கணங்கள் |
|---|---|---|
| 1. | அபுல் அ.்.லா மௌதூதி (2008) | 'ஜாஹ்த' எனும் அறபு வினையடியிலிருந்து பிறந்த சொல் தான் 'ஜிஹாத்' என்பதாகும். மொழி அடிப்படையில் இச்சொல்லின் பொருள், ஏதேனும் ஓர் இலக்கை அடைய இடைவிடாது முயற்சி செய்வது என்பதாகும். |
| 2. | முஹம்மத் அமாரா (2004) | 'ஜிஹாத்' எனும் சொல்லானது அறபுமொழியிலுள்ள ஒரு வார்த்தையாகும். அதற்கு பரந்த கருத்துள்ளது. அவற்றுள் சக்தியை பிரயோகித்தல், அர்ப்பணிப்பு ஆகிய கருத்துக்கள் முக்கியமானவையாகும். |
| 3. | யூசுப் அல்கர்ளாவி (2009) | 'ஜிஹாத்' என்பது ஒரு செயற்பாடாகும். எண்ணம் மற்றும் உறுதி மூலம் உள்ளத்தால் செய்யப்படுவதும், அழைப்பு- விளக்கவுரை மூலம் நாவால் செய்யப்படுவதும், சிந்தனை-நிர்வகிப்பு மூலம் அறிவால் செய்யப்படுவதுமான ஓர் முயற்சி ஆகும்.<br><br>'ஜாஹ்த' எனும் வினைச்சொல்லானது ஒரு விடயத்தைத் தடுப்பதற்காக, வெற்றிகொள்வதற்காக ஒருவர் தனது சக்தியை அர்ப்பணம் செய்வது ஆகும்.<br><br>'ஜிஹாத்' எனும் சொல்லானது முயற்சியைச் செலவிடுதல், அர்ப்பணிப்புச் செய்தல், பலத்தை அர்ப்பணித்தல் போன்ற மொழிரீதியான கருத்துக்களைக் கொண்டு பொருட்கோடல் செய்யப்படுகின்றது. |
| 4. | வஹிதுத்தீன் கான் (2010) | 'ஜுஹ்த்' எனும் அறபு மூலச்சொல்லில் இருந்து பெறப்பட்ட 'ஜிஹாத்' எனும் சொல்லானது உழைப்பு, முயற்சி, தொடர் போராட்டம்[7] முதலிய கருத்துக்களை கொண்டுள்ளது. |

மேற்கோள்காட்டப்பட்ட மொழிரீதியான வரைவிலக்கணங்களை வைத்து நோக்கும் போது 'ஜிஹாத்' எனும் சொல்லானது நேர்சிந்தனை கொண்ட கருத்துக்களை (Positive Meaning) உணர்த்தி நிற்பதை அவதானிக்க முடியும்.

"நாம் வாழும் பகுதி எப்படிப்பட்டதாக இருப்பினும், முஸ்லிம்களாகிய நாம் அறபுச் சொல்லியல் குறித்த சரியான வரைவிலக்கணத்தின் பக்கம் மீளவேண்டியிருக்கின்றது. 'ஜிஹாத்' என்பது முயற்சியையும் போராட்டத்தையும் குறித்து நிற்கும் ஒரு சொற்கூறு. அது யதார்த்தத்தில் இரண்டு கூறுகளை ஆழமாக வலியுறுத்துகின்றது: ஒன்று, எதிர்ப்புப்போராட்டம் (Resisting), மற்றொன்று சீர்திருத்தம்; (Reforming). தீயதை எதிர்த்துப் போராடுதல், கேடு விளைவிப்பவைகளை எதிர்த்துப் போராடுதல், நெறிபிறழ்ந்த போக்கையும் தவறான செயல்பாடுகளையும் களைந்திட முயற்சித்தல். அதன் பின்னர், நன்மையை

[7]'போராட்டம்' எனும் சொல் நேர்சிந்தனைக் கருத்துக்(Positive Meaning)கொண்டதாகும். ஒன்றின் மூலம் ஏற்படும் அபாயத்தைத் தவிர்க்க, நோவினையைத் தடுக்க மேற்கொள்ளப்படும் முயற்சியாகும். மேலும் ஒரு விடயத்தை அடைந்துகொள்வதற்கான பாதையில் ஏற்படும் அனைத்துவித இடர்களையும் எதிர்த்து தனது இலக்கை அடையும் போராட்டம் ஆகும். இந்தப் போராட்டமானது சூழ்நிலைக்கு ஏற்ப(Context of Situation)மாறுபட்ட வகையில் அமையும்.

அடைந்துகொள்வதையிட்டு முன்னெடுக்கப்படும் பகீரதப் பிரயத்தனம். 'ஜிஹாத்' என்பது இருவழிச் செயல்பாட்டு முறை: ஒன்று சீர்திருத்தம், மற்றொன்று அதற்கான போராட்டம். சீர்திருத்தம் என்பது யதார்த்தத்தில் எதனை அடைந்துகொள்வதற்காக? நிச்சயமாக அமைதி நிலையை அடைந்துகொள்வதற்கே அவசியமாகின்றது. ஆக, 'ஜிஹாத்' என்பது ஒட்டமொத்தமாக போர்க்களத்தையும் யுத்தத்தையும் மட்டுமே குறிக்கின்றது என்று எவரேனும் உங்களிடம் வாதிட முற்பட்டால், 'இல்லை! ஜிஹாத் என்பது அமைதியை நோக்கிய அல்லது சமாதானத்திற்கு இட்டுச்செல்லும் வழிமுறையே அன்றி வேறில்லை' என்று மறுமொழி அளித்துவிடுங்கள்.''[8]

**இ. 'ஜிஹாத்' – பத விளக்கத்தில் மொழிப்போக்கு (context)**

இறைவேதமான அல்குர்ஆனில் 'ஜிஹாத்' எனும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இச்சொல்லில் இருந்து பிரிந்த வகையிலான சொல்லமைப்புக்கள் அல்குர்ஆனில் முப்பத்தி நான்கு இடங்களில் வந்துள்ளன(கர்ளாவி,2009). இந்த வசனங்களை விளங்கிக்கொள்ள பின்வரும் நான்கு அமைப்புக்கள் / போக்குகள; (Contexts) பற்றிய தெளிவான பார்வை காணப்பட வேண்டும்.(அல்அமீன், 2016)

I. அல்குர்ஆனிய போக்கு(Context of Al-Quran)

II. அத்தியாய போக்கு(Context of Surah)

III. உரையமைப்பு(Context of Text)

IV. வசன அமைப்பு(Context of Ayat or Verse)இதில் பின்வரும் இரண்டு விடயங்களும் விரிவாக ஆராயப்பட வேண்டும்.

   i. வசனம் இறக்கப்பட்ட பின்னணி (அஸ்பாபுன்னுஃஸுல்)

   ii. மாறிய, மாற்றப்பட்ட வசனங்கள் (நாஸி ஃக் வல்மன்ஸு ஃக்)

அடுத்த கட்டமாக முன்சென்ற அல்ஃகுர்ஆன் விளக்கவுரையாளர்களின் (முபஷ்ஷிரூன்) விளக்கங்களை பெறுகின்ற போது மாத்திரமே குறித்த அல்குர்ஆன் வசனங்கள் தொடர்பான பரந்த அறிவைப் பெற முடியும். இதற்கு மாறாக, ஒரு சொல்லை (single word) ,ஒரு வசனத்தின் ஒரு பகுதியை (a part of a verse), ஒரு வசனத்தை (single verse) வைத்துக்கொண்டு வலிந்து வியாக்கியானம் கொடுப்பது அறிவுபூர்வமான அம்சமாக அமையாது. எடுத்துக்காட்டாக பின்வருவனவற்றை நோக்கலாம்.

''1990களின் இறுதிப்பகுதியில் மீண்டும் கிழக்கு மாகாணத்தில் 'ஜிஹாத்' என்ற பெயரில் ஒரு முஸ்லிம் **பயங்கரவாத அமைப்பு** இயங்குவதாகவும்…………………….. சிங்களப் பத்திரிகைகளில் செய்திகளும் கட்டுரைகளும் வெளியாகின.''[9]

''இஸ்லாமிய ஜிஹாத் **அடிப்படைவாதம்** இலங்கைக்குள் வேரூன்றி இருக்கின்றது.''[10]

''ஜிஹாத் பற்றி புனையப்பட்ட கருத்தொன்றை அமைச்சர் சம்பிக்க ரணவக்க கூறியுள்ளார். இறைவனை வணங்காத அனைவரையும் **கொல்லுவதே** 'ஜிஹாத்' என அவர் கூறியுள்ளார்.''[11]

''இலங்கையில் 'ஜிஹாத்' **முஸ்லிம் தீவிரவாதம்** தலைதூக்குவதாக எச்சரிக்கை விடுத்தோம்…………..''[12]

---

[8]அபுதர் (மொ.பெ.) (2016). *ஜிஹாதின் இரு வடிவங்கள்: போராட்டம் மற்றும் சீர்திருத்தம் - கலாநிதி தாரிக் ரமழான்.* சமகால இஸ்லாமிய வாழ்வு. Retrieved from: http//:islamiavaazhvu.blogspot.com.

[9] திபான்.(2016). *முஸ்லிம் ஆயுதக்குழு கதைகளின் வரலாறு.* தமிழ்மிறர். Retrieved from: http//:www.tamilmirror.lk/186718, 22.11.2016.

[10] சரன்யா.(2019).*பௌத்த பேரினவாதத்துக்கு கடிவாளம் போடவேண்டும்.* .வீரகேசரி.Retrieved from: http//:www.virakesari.lk/article/60394. (13.07.2019)

[11] ரிஸ்வி முப்தி.(2019). *ஜிஹாத் பற்றிய சம்பிக்கவின் கருத்து, இஸ்லாத்தை அவமதிப்பதாகும்.* ஜப்னா முஸ்லிம;.Retrieved from: http//:www.jaffnamusli.com/2019/06/blog-post. (12.06.2019)

[12]நவாஸ் சௌபி.(2015*).இலங்கை முஸ்லிம்களிடத்தில் ஜிஹாத் - இயலாமையின் குற்றச்சாட்டுகள்.* ஜப்னா முஸ்லிம்.Retrieved from: http//:www.jaffnamusli.com/2015/04/blog-post. (08.04.2015)

“இன்று மிக அதிகமாகத் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்ட இஸ்லாமிய மரபுச் சொல் ஜிஹாத் ஆகத்தான் இருக்க வேண்டும். ஜிஹாத் என்றாலே மற்ற மதத்தவர்களைக் கொல்லுதல், தாக்கி அழித்தல், அவர்கள் மீது போர் தொடுத்தல் என்கிற ரீதியில் ஒரு தவறான கருத்தோட்டம் நிலைபெற்றிருக்கின்றது.”[13]

‘ஜிஹாத்’ என்றாலே முஸ்லிம் அல்லாதவர்களை முஸ்லிம்கள் அழிப்பதற்கு பயன்படுத்தும் வார்த்தை என்ற தவறான கருத்து இன்று உலகம் முழுவதிலும் நிலவி வருகின்றது.”[14]

**ஈ. ஜிஹாத் - அதன் படித்தரங்கள்**

‘ஜிஹாத்’ எனும் விடா முயற்சி, தொடர் போராட்டம் இடம்பெறுவதற்கு பத்துப் படித்தரங்கள் இருப்பதாக இஸ்லாமிய அறிஞர்கள் கூறுகின்றனர் (உப்பாதா,2016-17). அவற்றை பின்வருமாறு அடையாளப்படுத்த முடியும்.

**I.உளப்போராட்டம்:**

பலத்தை பிரயோகிப்பதன் மூலம் உள்ளத்தோடு போராடுதல், மனிதனானவன் எப்போதும் தன் உள்ளத்தோடு போராட வேண்டியுள்ளது. ஏனெனில் அவனின் உள்ளம் பெரும்பாலும் தீயவைகளையே ஆசைகொள்கின்றது (அல்ஜவ்ஹரி). உண்மையான ‘ஜிஹாத்’ என்பது எண்ணத்தின் மூலம் உள்ளத்தால் உறுதியாகச் செயற்படுத்தப்படும் போராட்டமாகும்(கர்ளாவி, 2009). இவ்வுலகிலுள்ள ஒவ்வொரு மனிதனும் தன் மனோ இச்சைகளுடன் போராடக்கூடியவனாக உள்ளான். மனிதன் என்கிற வட்டத்திற்குள் உட்படுகின்ற அனைவரும் நல்லெண்ணத்துடன் வாழவும், பேராசைகளைத் தவிர்க்கவும், சிறந்த விடயங்களில் ஈடுபடுவதில் நிலையாக இருக்கவும் தன் உள்ளத்துடன் ஜிஹாத் செய்தே (போராடியே) ஆக வேண்டும். தீங்குகளுக்கு, தவறுகளுக்கு எதிராக ஒருவர் தன் முயற்சி, பலத்தை அர்ப்பணிக்க முன் உள்ளத்திலுள்ள தீய எண்ணங்களுக்கு எதிராகப் போராட வேண்டும் (கர்ளாவி,2009). உள்ளத்திற்கு எதிராகப் போராட வேண்டும் என்பதற்காக ஆயுதங்களைக் கையில் ஏந்துவது அறியாமைச் செயற்பாடாக அமைந்துவிடும். மாறாக, நற்போதனைகளைப் பெறுதல், உள ஆற்றுப்படுத்தல், நிதானமாகச் செயற்படுதல், சுயத்தை அறிதல், பொறுமையைக் கடைப்பிடித்தல் என்கிற அமைப்பில் போராட வேண்டும். இதன்போது சிறந்த வழிகாட்டல் கிடைக்கும் பட்சத்தில் மனோ இச்சையைக் கட்டுப்படுத்த முடியும். “போராளி (முஜாஹித்) என்பவர் அல்லாஹ்வுக்கு கட்டுப்பட தன் உள்ளத்துடன் போராடுபவர் ஆவார்.” என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (திர்மிதி: 1621)

**II.ஷைத்தானுடனான போராட்டம்:**

மனிதர்களை வழிகெடுப்பேன் என அல்லாஹ்வின் சந்நிதானத்தில் உறுதிபூண்ட ஷைத்தானுக்கு எதிராக ஒவ்வொரு மனிதனும் போராடுவது அவசியமாகும். ஷைத்தானை எதிர்க்க உள்ளத்திலுள்ள தீய எண்ணங்களுக்கு எதிராகப் போராட வேண்டும் (கர்ழாவி, 2009). மனிதனாவன் தன் பலத்தை செலவிட, முயற்சி செய்ய பல்வேறுபட்ட துறைகள் உள்ளன. அவை சிந்தனை ரீதியாகவோ, சடவாத ரீதியாகவோ அமையலாம். இதன்போது அவன் உள்ளத்தோடு போராட, ஷைத்தானின் கெடுபிடிகளை மிகைக்க, வெற்றிபெற விடா முயற்சியில் (ஜிஹாதில்) ஈடுபட வேண்டும் (அமாரா, 2004).

**III.குழப்பத்திற்கு எதிரான போராட்டம்:**

தீமையை அகற்ற எந்தளவு வலிமை தேவையோ அந்தளவிற்கு மாத்திரம் சக்தியை பயன்படுத்த வேண்டும் (மௌதூதி,2008). தனிநபர்களுக்கிடையில், குழுக்களுக்கிடையில் ஏற்படும் குழப்பங்களைத் தடுப்பதற்காக முறைப்படி முயற்சி செய்ய வேண்டும்.

**IV.அநியாயத்திற்கு எதிரான போராட்டம்:**

ஒரு மனிதன் தன் உள்ளத்திலுள்ள தீய எண்ணங்களுக்கு எதிராகப் போராடிய பின் சமூகத்திலுள்ள தீங்கிற்கு (அநியாயத்திற்கு) எதிராக தன் சக்திக்குட்பட்ட வரை எங்கு

[13] *ஜிஹாத் என்றால் என்ன?*(2016). Retrieved from: http//:m.facebook.com/16639451838. (21.04.2016)

[14] இப்னு ஜமீலா.(2010). *ஜிஹாத் ஓர் ஆய்வு*. சத்தியப்பாதை.Retrieved from: http//rajmohamedmisc.blogspot.com/2010/05. (04.05.2010)

தீங்கு இடம்பெற்றாலும், அதற்கெதிராகச் செயற்பட வேண்டும் (கர்ழாவி,2009) இவ்விடத்தில் வன்முறைகள் பிரயோகிக்கப்படக் கூடாது.

### V.சமூகச் சீர்கேடுகளைத் தடுப்பதற்கான முயற்சி:

முயற்சி செய்வதென்பது நன்மையை ஏவுதல், தீமையைத் தடுத்தல், அகில இறைவனின் பக்கம் அழைத்தல் ஆகிய எதிலும் அமையலாம் (மௌதூதி,2008). இதன்போது ஓர் சமூகப்பற்றுள்ளவர் சமூகச் சீர்கேடுகளைத் தடுக்க தன்னாலான உடல்சார், அறிவுசார் உழைப்பை பயன்படுத்த வேண்டும்.

### VI.அழைப்பு விடுப்பதற்கான முயற்சி:

'ஜிஹாத்' என்பது அமைதியான செயற்பாட்டிற்கான வடிவமாகும். இந்த அமைதியான செயற்பாடு அடுத்தவர்களை நேரான வழிமுறையின் பால் அழைப்பதற்கான வடிவத்தையும் பெறுகின்றது (வ்ஹிதுத்ீன்,2010). 'ஜிஹாத்' என்ற சொல்லானது அழைப்புப் பணியைப் பரப்புவதில் குறிப்பாக இஸ்லாமியத் தூதை எத்திவைக்க சக்தியைச் செலவிடுதல் என்ற கருத்திலும் இடம்பெற்றுள்ளது (கர்ளாவி, 2009)

### VII.பொறுமைக்கான முயற்சி:

இவ்வுலகம் சோதனைக்களமாகும். மனிதர்கள் அனைவரும் தொடர்தேர்ச்சியாக சோதிக்கப்படுகின்றார்கள். இதன்தொடராக அவன் பலவாறான தடைகளுக்கு உள்ளாகின்றான். இதன்போது தன் சுய ஆசைகளை சில காரணங்களுக்காக (இறை திருப்திக்காக) தியாகம் செய்ய வேண்டிய நிலையும் ஏற்படுகின்றது. இத்தகையதடைகள், தோல்விகள், பிரச்சினைகள் அனைத்தையும் தாண்டி உண்மையான பாதையில் உறுதியாக இருப்பதே பொறுமைக்கான விடா முயற்சியாகும் (வ்ஹிதுத்ீன், 2010).

### VIII.இடர்பாடுகளுக்கு எதிரான போராட்டம்:

'ஜிஹாத்' என்பது உண்மையான நம்பிக்கையாளருடைய (மு.ீமீன்) நாளாந்த வாழ்வை உயிரூட்டிக்கொள்வதற்கான தொடர்ச்சியான செயற்பாடாகும். எந்தவொரு நபரும் தன் வாழ்க்கை சில விடயங்களால் தடைப்பட விடமாட்டார். குறிப்பாக நல்லவற்றைச் செய்யும் வழியில் தடைகள் ஏற்படுவதை அவர் விரும்பமாட்டார். இந்த இடர்பாடுகளைத் தாண்டி, இறைவனின் கட்டளைக்கு அடிபணிய முயற்சிப்பதே உண்மையான 'ஜிஹாத்' ஆகும் (வ்ஹிதுத்ீன், 2010).

### IX.நயவஞ்சகர்களுடனான போராட்டம்:

பொய்யர்களுடன் உடன்பட்டு செல்ல வேண்டாமென அல்குர்ஆன் உபதேசிக்கின்றது. இவர்களுடன் அல்குர்ஆனைக் கொண்டு ஆக்கபூர்வமான 'ஜிஹாத்தில்' (முயற்சியில்) ஈடுபட வேண்டுமென ஆர்வமூட்டுகின்றது. அதாவது நேரான பாதைக்கு அவர்களை அழைப்பதன் மூலம் அவர்களுக்குப் பதிலளிக்க வேண்டும் (வ்ஹிதுத்ீன், 2010).

### X.வாளேந்தி இறைநிராகரிப்பாளர்களுடன் போராடுதல்:

இஸ்லாமிய மார்க்கமானது மனிதர்களின் மானம், உடைமை, இரத்தம் ஆகியவைகளில் மிக மிக கரிசனை கொண்டுள்ளது. இம்மூன்றில் கையாடல் செய்வதென்பது இறுக்கமானதொரு விடயமாகவே காணப்படுகின்றது. இந்தவகையில், வாளேந்திப் போராடுவதாக இருப்பின் அதற்கான வரையறைகளையும், நோக்கங்களையும், பேணுதல்களையும் இஸ்லாம் அழகாகக் கட்டமைத்துள்ளது. எடுத்த மாத்திரத்தில் மனித உயிர்களைக் கொல்லுமாறு இஸ்லாம் ஏவவுமில்லை, அதற்கான வழிகாட்டல்களும் இஸ்லாத்தினால் வழங்கப்படவுமில்லை. 'ஜிஹாத்' என்ற பிரயோகம் அல்-குர்ஆன், ஸுன்னாவின் ஒளியில் விரிந்த கருத்தைக் கொண்டதாகும். அதன் ஒரு சிறு பகுதியே ஆயுதப் போராட்டமாகும் (மன்ஸுர்,2019). இந்தவகையில், முழு இஸ்லாமியப் போதனைகளிலும் வாளேந்திப் போராடுவது ஒரு சிறு புள்ளியாகவே(point) காணப்படுகின்றது. இஸ்லாத்திற்கும் வாளேந்திப் போராடுவதற்கும் எவ்வித தொடர்பும் இல்லையென இவ்வாய்வு முன்மொழிய எத்தணிக்கவில்லை. மாறாக, அல்-குர்ஆனில்

இடம்பெறும் வாளேந்திப் போராடுவது பற்றிய வசனங்களை ஏலவே கூறப்பட்ட நான்கு போக்குகளுடன் (contexts) ஆராய்கின்ற போது மிகத் தெளிவான வரையறைகளைப் பெற்றுக்கொள்ள முடியும். இது தொடர்பான வசனங்களில் உள்ள ஒரு பகுதியை, ஒரு சொல்லை மாத்திரம் மேற்கோள்காட்டி வியாக்கியானம் செய்வது தவறான புரிதலின் பால் இட்டுச்செல்லும் என்பதில் சந்தேகமில்லை. மேற்கூறப்பட்ட ஒன்பது படித்தரங்களைத் தாண்டி பத்தாவது படித்தரத்திற்கு வருவதற்கு மிக நீண்ட கால இடைவெளி அவசியப்படும் என்பதை யதார்த்தபூர்வமாக புரிந்துகொள்ள முடியும். அல்-குர்ஆனில் இடம்பெற்றுள்ள வாளேந்திப் போராடுவதைப் பற்றிய வசனங்களை ஆராய்வது இன்னுமொரு ஆய்வுக்கு இட்டுச்செல்லும் என்றவகையில் இவ்வாய்வு 'ஜிஹாத்' பற்றிய மொழிரீதியான கருத்தியலை அலசுவதாக மாத்திரம் அமைகின்றது.

மேற்கூறப்பட்ட பத்து படித்தரங்களும் 'ஜிஹாத்' எனும் விடா முயற்சி செய்வதற்குரிய கட்டங்களை தெளிவுபடுத்துகின்றன. "இன்னும் நீங்கள் அல்லாஹ்வின் பாதையில் அவனுக்காகப் போராட வேண்டிய முறைப்படி போராடுங்கள்" (22:78) என அல்லாஹ் சான்று பகர்கின்றான்.

'ஜிஹாத்' என்பது இறைவனை நோக்கிய பாதையில் உழைப்பதற்கான பிரயாசை ஆகும். இதனை அறிஞர் ஜேம்ஸ் ஜோன்ஸ்சன் என்பவர் கூறும் போது…"ஜிஹாத் என்பதன் பொருள் இறைவனின் பாதையில் செல்ல ஒரு முஸ்லிம் அடிப்படையாக மேற்கொள்ளும் முயற்சி, போராட்டம் ஆகும். இந்த விடா முயற்சியானது மூன்று விதமாக இடம்பெறலாம்.

i. **உளமுயற்சி**: தார்மீக சீர்திருத்தம், நம்பிக்கை மூலம் அல்லாஹ்வின் கட்டளைகளை உள்வாங்குதல்.
ii. **நா முயற்சி**: அல்குர்ஆனை எத்திவைக்க நல்ல வார்த்தைகளை வெளிப்படுத்தல்.
iii. **கையுழைப்பு**: அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெற நல்ல விடயங்களைச் செய்தல்.(றமீஸ், 2014)

இம்மூன்று விதமான முயற்சிகளையும் மேற்கூறப்பட்ட கட்டங்களில் பயன்படுத்த வேண்டும் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். இதன்போது அறிவுசார் (Intellectual), கருத்துசார; (Ideological) செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் (வ்ஹிதுத்தீன், 2010).

## 7. முடிவுரையும் பரிந்துரைகளும்

- ✓ 'ஜிஹாத்' எனும் அறபுப்பதத்திற்கு பயங்கரவாதம், தீவிரவாதம், கடும்போக்கு, தாக்குதல், அத்துமீறல், இரத்தமோட்டுதல் என்பன போன்ற எதிர்மறையான பொருட்கோடல்கள் வழங்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன.
- ✓ 'ஜிஹாத்' எனும் அறபுப்பதமானது உடல், உள ரீதியான விடாமுயற்சி, அர்ப்பணிப்பு, கடின உழைப்பு, ஆக்கபூர்வமான செயற்பாடு, தியாக உழைப்பு, தொடர் போராட்டம், அறிவியல் ரீதியான முயற்சி என மொழியியல் ரீதியான நேர்கருத்துக்கள் பலவற்றை கொண்டிருக்கின்றது.
- ✓ இறைவன் விரும்பக்கூடிய விடயங்களை அடைந்துகொள்வதற்கும், இறைநிராகரிப்பு, பாவமான காரியங்கள் போன்ற இறைவனின் வெறுப்புக்குரியதான விடயங்களிலிருந்தும் தவிர்ந்துகொள்வதற்குமாக மேற்கொள்ளப்படுகின்ற முயற்சி, அர்ப்பணிப்பு 'ஜிஹாத்' ஆக அடையாளப்படுத்தப்படுகின்றது.
- ✓ 'ஜிஹாத்' எனும் சொல்லை மொழி ரீதியாக ஆய்வுக்குட்படுத்தும்போது, மேற்கூறப்பட்ட வலிந்து கொடுக்கும் எதிர்மறை அர்த்தங்கள் எந்தவொரு அறிஞர்களாலும் முன்வைக்கப்படவில்லை என்பதை ஆய்வின் முடிவாகக் கொள்ள முடியும்.
- ✓ ஒரு மொழியினுடைய கலைச்சொற்களை(Terminologies) பிறமொழிக்கு மாற்றுகின்ற போது குறித்த சொல்லுடைய மொழியியல் ரீதியான கருத்துக்களை ஆய்வுக்குட்படுத்தல் வேண்டும்.
- ✓ ஒரு சொல்லினுடைய நேர்கருத்துக்கள் பல காணப்படும்போது எதிர்மறையான ஒரு கருத்தை மாத்திரம் வைத்து அச்சொல்லை வியாக்கியானம் செய்வது தவிர்க்கப்படல் வேண்டும்.

- ✓ சொற்களுக்கான கருத்துக்களை முன்வைக்கும்போது, அவற்றின் மொழிநடை(Context) கவனத்திற்கொள்ளப்படல் வேண்டும்.

**உசாத்துணைகள்**


அமீன்,ஆமால்.(2016). *அல்குர்ஆனில் மொழிநடையின் வகைகள்.*சஞ்சிகை: நாஸிர் பல்கலைக்கழகம்.

ˇஇமாரா, முஹம்மத்.(2004). *இஸ்லாமும் போரும்.* கெய்ரோ: மக்தபதுஸ் ஷுரூக் ˇத்வ்லியா.

ˇஉப்பாதா, முராத். (2016-17). *அதருஸ் ஸியாக் பீ த்.ஃ.வீலி ஆயாதில் ஜிஹார்த்.* Sheikh Arab Tebsi University. Algeria: The Democratic Repbulic.

கர்ளாவி, யூஸுப்.(2009). *பிக்ஹுல் ஜிஹார்த்.* (2009). கெய்ரோ: மக்தபா வஹ்பா.

மன்ஸூர், எம்.ஏ.எம். (2019). *அல்குர்ஆன் வன்முறையைத் தூண்டுகிறதா?.*கொழும்பு: மிஷ்காத் ஆய்வு நிறுவனம்.

மௌதூதி, அபுல் அஃ.லா.(2008). *ஜிஹாத் ஓர் இஸ்லாமிய பார்வை.* கொழும்பு: இஸ்லாமிக் புக் ஹவுஸ்.

ஜவ்ஹறி, (2019). முஹம்மத். *ஜிஹார்த் பற்றிய விளக்கம்.*Retrieved from: https//www.academia.edu.

ஹய்தான், ˇஸாலிஹ். (1997). *இஸ்லாத்தில் ஜிஹார்த்.* ரியாத்: தாருல் ஷமிஈ லின்னஸ்ரி வல் தவ்ஷீ..

ஷபீக், ˇஹம்தி. *ஜிஹார்த் என்றால் என்ன?.*Retrieved from: https://saaid.net/ahdath/68.htm. (06.07.2019)

Aboobacker,Rameez.(2014). *The Demystification of Jihad and Islamic Capitalism: Comparative Analysis of Max Weber's Thesis on the protestant Ethics and the Spirit of Capitalism*. 'Kalam' International Journal of Faculty of Arts and Culture, South Eastern University of Sri Lanka.

Addawri, Aiman.(2017). *The Distinction between Jihad and Terrorism in the light of the Holy Quran and Sunnah of the Prophet*. Hadis Tetkikleri Dergisi (HTD), XV/1.

Khan, Wahiduddin.(2010). *Jihad, Peace and Inter Community Relations in Islam*. New Delhi: Rekha Printers Pvt Ltd.

Shibly, Ahamed. (2019). *A measurement Study on Racist Hate Speech in Twitter using Tweet Binder*. Journal of Information Systems and Information Technology, South Eastern University of Sri Lanka. ISSN:2478 0677 1017. Retrieved from: https://www.seu.ac.lk/jisit/index.php.

Tawhidi, Salman (Tr). (1985). *Jihad.* Iran: Islamic propagation Organization.